# கிருஷ்ணகிரி மாவட்ட அரசு செய்தி

## கிருஷ்ணகிரி மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

நாள்: 17.10.2025

கிருஷ்ணகிரி மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலக கட்டுப்பாட்டில் காலியாக உள்ள (பாம்பாறு அணை மீன்வள ஆய்வாளர் அலுவலகம் 01 மற்றும் கிருஷ்ணகிரி அரசு மீன்பண்ணை மீன்வள ஆய்வாளர் அலுவலகம் - 02) மொத்தம் 03 மீன்வள உதவியாளர் பணியிடங்களை கீழ்க்கண்ட இனசுழற்சி முறையில் தேர்வு செய்திட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணியிட பெயர் **: மீன்வள உதவியாளர்** எண்ணிக்கை **: 03 காலிபணியிடம்**

தகுதி:
1. தமிழில் எழுத, படிக்க மற்றும் பேச தெரிந்திருக்க வேண்டும்.
2. நீந்துதல். மீன்பிடித்தல், வலை பின்னுதல், பரிசல் ஓட்டுதல், வீச்சு வலை வீசுதல் மற்றும் பழுதடைந்த வலைகளை சரி செய்தல்,
3. மீன்வளத்துறையின் கீழ் உள்ள ஏதேனும் ஒரு மீனவர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று சான்று பெற்றிருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| இன சுழற்சி வ.எண் | சுழற்சி | முன்னுரிமை பெற்றவர் / முன்னுரிமையற்றவர் | காலியிடம் |
|---|---|---|---|
| 25 | பொதுப்போட்டி (GENERAL) | முன்னுரிமையற்றவர் | 1 |
| 26 | ஆதிதிராவிடர் (WOMEN) | முன்னுரிமையற்றவர் | 1 PSTM |
| 27 | பொதுப்போட்டி (GENERAL) | முன்னுரிமையற்றவர் | 1 |

இனசுழற்சி 26 ல் தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் அதே இனசுழற்சி ஒதுக்கீட்டில் ஆண் விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவர்.

சம்பளம்: **ரூ 15900 - ரூ 58500 நிலை 2**

ஏற்றமுறை

வயது வரம்பு: 01.07.2025 அன்று ஆதிதிராவிடர் - 37, பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 34 மற்றும் இதர வகுப்பினர் 32 வயதுக்குள் இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: விண்ணப்பதாரர் 1).கல்வி சான்றிதழ் நகல், 2).குடும்ப அட்டை நகல், 3).ஆதார் அட்டை நகல்,4). வயது நிரூபண சான்றிதழ் நகல், 5).ஜாதி சான்றிதழ் நகல் மற்றும் 6).2 எண்ணம் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பத்தினை கீழ்கண்ட அலுவலக முகவரிக்கு 05.11.2025 பிற்பகல் 5.30 மணிக்குள் கிடைக்கதக்க வகையில், கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்ப உறையின் மேல் "கிருஷ்ணகிரி மாவட்ட மீன்வள உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பித்தல்" என எழுதி அனுப்பிட வேண்டும்.

**அலுவலக முகவரி:**

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்),
5/596, ஔவையார் தெரு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், தருமபுரி - 636 705
(கூடுதல் விவரங்கள் பெற தொலைபேசி எண். 04342-233923, 9384824308)

மாவட்ட ஆட்சித் தலைவர். கிருஷ்ணகிரி
பெருந்தலைவர் /பணியாளர் தேர்வுக்குழு.

*வெ.ஆ.எண்.: 132/2025/ செ.ம.தொ.அ/கிருஷ்ணகிரி மாவட்டம் நாள்: 17.10.2025*